DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | **CC No. 1/2026** |
| Deposition of witness | : | **PW-7** |
| Name | : | **சந்திரா** |
| Father's /Husband Name | : | **கந்தசாமி** |
| Village | : | **நன்னிலம்** |
| Taluk | : | **நன்னிலம்** |
| Age | : | 52 |
| Occupation | : | **காவல் ஆய்வாளர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2025 ம் தேதி நன்னிலம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவலர் ஆதவன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண். 254/2025, சட்டப்பிரிவுகள் 132, 296 (பி), 351(3) BNSS-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 20.12.2025 ம் தேதி மதியம் 03.30 மணியவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் சேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு வழக்கின் புகார்தாரர் காவலர் ஆதவன் மற்றும், சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகளான காவலர்கள் சந்திரமோகன், மணிகண்டன், வீரகதிர்வன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்தும், பின்பு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான சுப்பிரமணியன்

என்பவரை விசாரித்தும், மேலும் பார்வை மகஜர் தயார் செய்ததற்கு சாட்சியாக இருந்த மேற்படி அதே சுப்பிரமணியனை விசாரித்தும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான சேகர் என்பவரையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்தும், பின்பு எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரியை கடந்த 20.12.02025ம் தேதி மாலை 05.30 மணியளவில் நன்னிலம் பேருந்து நிலையம் அருகில் வைத்து அடையாளம் கண்டு பின்பு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். பிறகு எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் புகார்தாரரிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரம் அதிகாலை 02.45 என்றாலும், ஆனால் புகார் பெறப்பட்டது மதியம் 03.00 மணி என்றால் சரியல்ல, காலை 10.00 மணிக்கு அ.சா.1 புகார் அளித்து விட்டார், ஆனால் அதனை சி.சி.டி.என்.எஸ். காவல் இணைய தளத்தில் 2.0 Version–ல் தட்டச்சு செய்து அதை சரிபார்த்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்ட நேரம்தான் 03.00 மணி என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 3 ல் பொதுவாக தகவல் கிடைத்த நேரத்தைதான் குறிப்பிடுவது வழக்கம் என்றால் இல்லை, முதலில் அவ்வாறான வசதி இருந்தது தற்பொழுது சி.சி.டி.என்.எஸ். காவல் இணைய தளத்தில் 2.0 Version–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் நேரமே அங்கு பதிவாகிறது. சி.சி.டி.என்.எஸ். காவல் இணைய தளத்தில் 2.0 Version எப்பொழுது நடைமுறைக்கு வந்தது என்றால் 2025ம் வருடம் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்திலேயே நடைமுறைக்கு வந்துவிட்டது. முதல் தகவல் அறிக்கை காலம் 3ல் தகவல் பெறப்பட்ட நேரமாக 15.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் தகவல் பெறப்பட்ட நேரமாக 20.12.2025ம் தேதி 15.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 சொல்வது போல் சம்பவம் நடைபெறாத காரணத்தினால்தான் புகார் பெறப்பட்ட நேரத்தில் வேறுபாடு காணப்படுகிறது

என்றால் சரியல்ல. இவ்வழக்கில் ஆயுதங்கள் எதையும் கைப்பற்றப்பட வில்லை என்றால் சரிதான். அ.சா.1 அவரது புகாரில் எதிரி, பயன்படுத்தியதாக கூறப்படும் ஆயுதத்தின் அளவுகள் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் அ.சா.1 காவல் நிலைய பணியில் இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் குற்ற இறுதி அறிக்கையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தேவை ஏற்பட்டால் தாக்கல் செய்யலாம். சம்பவ சமயத்தில் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் நான்தான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அ.சா.2 ரோந்து பணியில் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் குற்ற இறுதி அறிக்கையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சி.சி. டி.வி. பதிவுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சி.சி. டி.வி. பதிவுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்தால், அது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால், தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி, அவரது மனைவியிடம் சண்டை போட்டதாக அவரது மனைவியோ, மகனோ, என்னிடம எழுத்துமூலமான புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1, அவரது புகாரிலோ, அல்லது என்னிடம் அளித்த வாக்குமூலத்திலோ அவருக்கு அவமானம் ஏற்பட்டதாகவோ, உயிர் பயம் ஏற்பட்டதாகவோ, அந்த பயத்தினால் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கூறவில்லை என்றால், அவமானம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு கூறவில்லை, ஆனால் உயிர் பயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். உயிர்பயம் ஏற்பட்டதற்காக பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று புகாரிலோ என்னிடம் அளித்த வாக்குமூலத்திலோ அ.சா.1 குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து நள்ளிரவு 02.45 மணிக்கு எனக்கு போன் மூலம் தகவல் கூறியதாக எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எனக்கு எந்த தொலைபேசி எண்ணிலிருந்து போன் செய்தார் என்ற விபரத்தை எனது விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறாததால்தான், தொலைபேசி எண்கள் குறிப்பிட்டு வாக்குமூலங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும்,

இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும், நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சியான சுப்பிரமணியன் என்பவர் காவல் நிலையத்திற்கு உணவு சமைத்து தருபவர் என்றால் சரிதான். ஆனால் அவர் காவல் நிலையத்திற்கு எதிரில் இருந்து சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவார். அ.சா.5 சுப்பிரமணியன் போலீசாருக்கு வேண்டப்பட்ட சாட்சி என்பதால் அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 சொன்னது போல் சம்பவமே நடைபெறாத காரணத்தால்தான் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், சி.சி. டி.வி பதிவுகள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Muncif -Cum- Judicial Magistrate,
Nannilam.